IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.226/2018
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.30 p.m.

வா.சா. 1 சாட்சி முத்து த.பெ.அழகுமலை

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additioanl District Munsif on 10.09.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வா.சா.ஆ.10 ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி அவரது பெரியப்பாவுக்கு 3செண்டு பாகப்பாத்திய விடுதலை கொடுத்துள்ளதை மறைத்துள்ளார் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.10 ஆவணம் எந்த சர்வே எண்ணை பொறுத்து ஏற்பட்டது என்றால் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை.

2. வா.சா.ஆ.10 ஆவணத்தில் கண்ட சொத்துக்கும், வழக்குச் சொத்துக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணம் எவ்வாறு வழக்குச் சொத்துக்கு சம்மந்தப்பட்டது என்றால் பிரதிவாதி அவரது எதிர்கோரிக்கை சொத்து விபரத்தில் கூறிய சொத்து விபரம்தான் வா.சா.ஆ.10 ஆவணத்தில் கண்ட சர்வே எண் ஆகும். பிராது வழக்குச் சொத்திற்கும் வா.சா.ஆ.10 ஆவணத்தில் கண்ட சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 ஆவணத்தில் செங்குளம் கிராமத்தில் உள்ள நஞ்சை சர்வே எண் 70/3க்கு புதிய டவுன் சர்வேஎண் 2/3 ல் கண்ட சொத்து கட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் எதிர்கோரிக்கை சொத்தானது சர்வே எண் 70/6, 70/7க்கு புதிய டவுன்

சர்வே எண் 2/7B என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் எதிர்கோரிக்கை சொத்து விபரத்தில் உள்ள சொத்திற்கும், நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10ல் உள்ள சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் வா.சா.ஆ.10 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. மேற்படி வா.சா.ஆ.10 ஆவணத்தை பற்றி எனது பிராதிலோ, பிரதிவாதியின் எதிர்கோரிக்கைக்கு தாக்கல் செய்த பதிலுரையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:12.35p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.10 14:53:39 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.